மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

16.11.2022 புதன்கிழமை

supeedsam.com supeedsam@gmail.com

## சிங்கப்பூர் - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தவும்

### ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை

சிங்கப்பூர் – இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை மிகக் குறுகிய காலத்திற்குள் நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். சிங்கப்பூர்–இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இது தொடர்பில் தற்போது நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், தற்போதுள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும் விரைவான தீர்வுகளை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர். எச்.எஸ். சமரதுங்க, சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம், வர்த்தக, வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ்.டி. கொடிகார, மேசர் யானா மற்றும் வரித்துறைத் தலைவர்கள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## மூன்று அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை குறைப்பு

லங்கா சதொச நிறுவனம் மூன்று அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையை குறைத்துள்ளது. இதன்படி, சிகப்பு பருப்பு, டின் மீன் (உள்ளூர்) மற்றும் சிவப்பு நண்டு ஆகியவற்றின் விலை குறைக்கப்பட்டுள்ளது. குறித்த விலைகள் இன்று (நவம்பர் 16) முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைக்கப்படும் என லங்கா சதொச தெரிவித்துள்ளது. தொடர்புடைய உணவுப் பொருட்களின் புதிய விலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. சிவப்பு பருப்பு 1 கிலோ – ரூ 389, டின் மீன் (உள்ளூர்) 425 கிராம் – ரூ 540, சிவப்பு நண்டு 1 கிலோ – ரூ 205

## 25 நாட்களாக தேங்கி கிடக்கும் 4 இலட்சம் கிலோகிராம் பால் மா கொள்கலன்கள்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டின் அனுமதி மறுக்கப்பட்டதன் காரணமாக கொழும்பு துறைமுகத்தில் 25 நாட்களாக 4 இலட்சம் கிலோகிராம் பால் மா அடங்கிய 17 கொள்கலன்கள் தேங்கிக் கிடப்பதாக பால் மா இறக்குமதி நிறுவனத்தின் முன்னாள் தலைவர் கலாநிதி லக்ஷ்மன் விஜேசூரிய தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டின் அனுமதி மறுக்கப்பட்டதன் காரணமாக துறைமுகத்தில் 25 நாட்களாக 4 ,லட்சம் கிலோகிராம் பால் மா அடங்கிய 17 கொள்கலன்கள் காணப்படுகின்றன. இந்நிலையில் 17 பால்மா கொள்கலன்களை விடுவிப்பதற்காக 40 ,லட்சம் ரூபா தாமதக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் இதன் காரணமாக பால் மாவின் விலையை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்க நேரிடலாம். கப்பலில் பால் ஏற்றும் போது ஒரு சட்டமும், நடுக்கடலில் திரும்பும் போது மற்றொரு சட்டமும், கப்பல் கொழும்பு துறைமுகத்தை நெருங்கியதும் மற்றுமொரு சட்டமும் அமுல்படுத்தப்படுவதனால் ,ந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்றார்.

## பாடசாலை உபகரணங்கள் 300 வீதத்தால் அதிகரிப்பு



பாடசாலை உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்கள் உள்ளிட்டவை 300 வீதத்தால் அதிகரித்துள்ளதாக பெற்றோர்கள் குற்றம் சுமத்துகின்றனர். இதனால் அடுத்த ஆண்டுக்கான பள்ளிப் பயிற்சிப் புத்தகங்கள் உள்ளிட்ட பொருட்களை வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறுகின்றனர்.

10 ரூபாயாக இருந்த பென்சில் 40 ரூபாயும், பேனா 30 ரூபாயும், 55 ரூபாயாக இருந்த உடற்பயிற்சி புத்தகம் 120 ரூபாயும் என குறிப்பிடுகின்றனர். மேலும் 1200 ரூபாவாக இருந்த பாடசாலை காலணிகள் மற்றும் பைகளின் விலை 3000 ரூபாவாக உயர்ந்துள்ளதுடன், தண்ணீர் போத்தல்கள் என அனைத்து பொருட்களின் விலையும் தாக்குப் பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். இதுதவிர வண்ண பென்சில்கள், பேஸ்டல்கள், பென்சில் பாக்ஸ்கள் போன்ற அனைத்து பொருட்களின் விலைகளும் பெருமளவு அதிகரித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## பாதுகாப்பு ஒதுக்கீடுக்கு எதிராக வாக்களிப்போம்

### என்கின்றார் செல்வம் எம்.பி.



வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளுக்கு எதிராக தமது தரப்பினர் வாக்களிக்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். இன்று நாடாளுமன்றில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் மக்களை புறக்கணிக்க மாட்டோம்

அரசாங்கம் முன்னெடுக்கும் அனைத்து வேலைத்திட்டங்களில் இருந்தும் தமிழ் மக்களை புறக்கணிக்கும் நோக்கம் இல்லை என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தமிழர்கள் புறக்கணிக்கப்படுவதாக குற்றம் சாட்டியிருந்தார். இதற்கு பதிலளித்த நீதி அமைச்சர், வடக்கு மாகாணத்தில் நிலவும் போதைப்பொருள் பிரச்சினை குறித்து ஆராய வடக்கு ஆளுநர் தலைமையில் செலயலணி அமைக்கப்பட்டுள்ளது என்றும் அதேபோன்று நாடளாவிய ரீதியிலும் அமைக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் தொடர்பான பிரச்சினைகளை கொண்டுள்ள இந்தியாவில் இருந்து நாடு திரும்பியவர்களுக்காக நடமாடும் சேவைகளை ஆரம்பித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். அத்தோடு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு நஷ்டஈடு வழங்கவும் அதனை இரட்டிப்பாக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

## தேயிலை தொழில் கிட்டத்தட்ட முற்றாக வீழ்ச்சியடைந்தமை கடந்த அரசாங்கத்தின் இயற்கை விவசாய பிரவேச வெறி



உலகின் முன்னணி தேயிலை ஏற்றுமதியாளர் மற்றும் உலகின் உயர்தர தேயிலை வர்த்தக நாமம் என சர்வதேச நன்மதிப்பை பெற்றிருந்த எமது நாட்டின் தேயிலை தொழில் கிட்டத்தட்ட முற்றாக வீழ்ச்சியடைந்தமை கடந்த அரசாங்கத்தின் இயற்கை விவசாய பிரவேச வெறியின் விளைவுகளில் ஒன்றாகும் என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இரசாயன உரங்களுக்குத் தடை விதிக்கப்பட்டதால்,தேயிலை விளைச்சல் மற்றும் அதன் தரம் வேகமாக வீழ்ச்சியடைந்தது.தேயிலைத் தொழிலின் இலாபமீட்டல் தன்மை குறைந்து வருவதால்,பெரிய அளவிலான தேயிலைத் தோட்டங்கள் படிப்படியாக தரிசு நிலங்களாக மாறி வருகின்றன. சிறு மற்றும் நடுத்தர அளவிலான தேயிலை தோட்டங்கள் மற்றும் தேயிலை தொழிற்சாலைகளின் நிலைபேறு தன்மை சரிந்துள்ளன. வீழ்ச்சி கண்டுள்ள தேயிலை உற்பத்தி சுழற்சியை அவசரமாக மீட்டெடுப்பது அந்நிய செலாவணியை மீட்டெடுப்பதற்கான வழிமுறையாக மட்டுமல்லாமல், இந்தத் தொழிலை நம்பியுள்ள கிட்டத்தட்ட 5 இலட்சம் மக்களின் நலனுக்காகவும் இன்றியமையாது நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றாகும் என்றார்.




தினமும் உங்கள் சுபீட்சம் பத்திரிகை பார்வையிட www.supeedsam.com இணைய தளத்திற்கு செல்லுங்கள்



# பரிசளிப்பு விழாவும், வாசகர் கௌரவிப்பும்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பெரிய கல்லாறு பொது நூலகமும் கல்வியூர் வாசகர் வட்டமும் பொதுமக்களும் இணைந்து நடாத்திய பரிசளிப்பு விழாவும், வாசகர் கௌரவிப்பு நிகழ்வும் பெரிய கல்லாறு பொது நூலகத்தில் நடைபெற்றது. இதன் போது மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டதோடு மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

இதில் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சி.பிரகாஸ் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் ஞா.யோகநாதன், பிரதேச சபை உறுப்பினர்களான ச.கணேசநாதன், மே.வினோராஜ், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை செயலாளர் சா.அறிவழகன், சன சமூக நிலைய உத்தியோகத்தர் சி.குகனேசன் மற்றும் கிராமத்தின் பல முக்கியஸ்தர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள், விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளனர்.

# எரிவாயு தட்டுப்பாடு மக்களின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் ஏற்படுகின்றது




எரிவாயு தட்டுப்பாடு மக்களின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் ஏற்படுவதாக கல்முனை பிராந்திய எரிவாயு முகவர் உயரதிகாரி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார். கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்தியத்தில் உள்ள பெரியநீலாவணை மருதமுனை மணல்சேனை நற்பிட்டிமுனை பாண்டிருப்பு கல்முனை சாய்ந்தமருது சேனைக்குடியிருப்பு நாவிதன்வெளி சொறிக்கல்முனை சம்மாந்துறை உள்ளிட்ட பகுதிகளில் சடுதியாக லிற்றோ எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் பரவியிருந்தன.

இதனை தொடர்ந்து எரிவாயு களஞ்சியப்படுத்தப்படுகின்ற பிரதான முகவர் நிலைய உயரதிகாரி ஒருவரை தொடர்பு கொண்ட போது மக்களின் பொறுப்பற்ற செயற்பாடே எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட காரணம்.ஏற்கனவே விறகு அடுப்புகளை பாவித்து வந்த மக்கள் தற்போது பெய்து வருகின்ற மழை காரணமாக அவ்வடுப்புகளை கைவிட்டு எரிவாயு அடுப்புகளில் நாட்டம் கொண்டுள்ளனர்.,வ்வாறான நிர்ப்பந்தம் காரணமாகவும் ஒரே நேரத்தில் பொதுமக்களிடம் ,ருந்து எரிவாயுக்கான கேள்விகளும் அதிகரிப்பதனால் ,வ்வாறான தட்டுப்பாடுகள் ஏற்படுகின்றன.

மேலும் எமது நற்பிட்டிமுனை லிட்ரோ எரிவாயு விநியோக நிலைய மொத்த விற்பனை நிலையத்திற்கு எடுத்து வரப்பட்ட சுமார் 1000 க்கும் அதிகமான சிலிண்டர்கள் ஒவ்வொரு நாளும் வாகனங்களில் ஏற்றப்பட்டு விநியோகம் ,டம்பெற்று வருவதாகவும் செயற்கை தட்டுப்பாடு என்ற செய்தி உண்மைக்கு புறம்பானது என அவர் மேலும் தெரிவித்தார். அத்துடன் எரிவாயுக்கான விலைக்குறைப்பு தொடர்பான அறிவித்தலை நம்பி ,ருந்து சுயநலமாக செயற்பட்ட மக்கள் அதன் பின்னர் திடீரென எரிவாயுவை கொள்வனவு செய்த செயற்பாடும் தட்டுப்பாடு நிலவ மற்றுமொரு காரணமாகும் என அவர் குறிப்பிட்டார்.

இது தவிர 12.5 கிலோ கிராம் 5.0 மற்றும் 2.5 கிலோ கிராம் எடையுடைய சமையல் எரிவாயு சீராக விநியோகிக்கப்படுகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

# மட்டக்களப்பு சிவாநந்த வித்தியாலய தேசிய சாதனையாளர்கள் பாராட்டி கௌரவிப்பு



மட்டக்களப்பு சிவாநந்த வித்தியாலயத்தின் சார்பில் தமிழ்தினப் போட்டியிலும், விளையாட்டுப்போட்டியிலும் கலந்து 2022 ம் ஆண்டுக்கான தங்கம், வெள்ளி மற்றும் வெங்கல பதக்கங்களை வென்ற மாணவர்கள் இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் நீலவாநந்த சுவாமி அவர்களின் ஆசிர்வாதத்துடன் பாடசாலை அதிபர் திரு.க.சுவர்ணேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற வரவேற்பு வைபவத்தில் சிவாநந்த வித்தியாலயத்தின் பழைய மாணவரும், மண்முனை வடக்கு பிரதேச செயலாளருமான திரு.வ.வாசுதேவன் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுவின் செயலாளர் திரு.ஞ.சந்திரகுமார் மற்றும் ஆசிரியர்கள்,

பழையமாணவர் சங்க உறுப்பினர்கள் இராமகிருஷ்ண மிஷன் வளாகத்திலிருந்து பாண்டு வாத்திய குழுவினரின் இசை முழக்கத்துடன் அழைத்து வரப்பட்டு வித்தியாலய பிரதான மண்டபத்தில் வைத்து பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். இதில் விளையாட்டுத்துறை ஆசிரியர்களான திரு.சு.தினேஸ்குமார் ரூபவ் னு.சு.மரியசெல்வம் மற்றும் பயிற்றுவிப்பாளர் திரு.திருச்செல்வம், கம்சி ஆகியோரும் தமிழ்த்தினப் போட்டி இசை நிகழ்ச்சியில் வெள்ளிப்பதக்கத்தை பெறுவதற்கு காரணமாக இருந்த திருமதி.ஜெயந்தி.கலிங்கேஸ்வரன் ஆசிரியை ஆகியோரும் பாராட்டி கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

NATURE GROWERS
இயற்கை முறை (நஞ்சற்ற) விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவது மட்டுமல்லாது இயற்கைமுறை (நஞ்சற்ற) விவசாயத்தின் நன்மைகளை மக்களுக்கு அறியப்படுத்துவதும் ஆரோக்கியமான உணவை வழங்குவதும் எமது நாட்டின் உணவுப்பற்றாக்குறை மற்றும் உணவுப்பாதுகாப்பிலும் கவனம் செலுத்துவதே NGC யின் நோக்கமாகும்.
இயற்கை முறை விவசாயத்திட்டத்தினூடாக தெரிவு செய்யப்பட்ட 700 விவசாயிகளை கொண்டு உருவாக்கப்பட்டதே "நேச்ச குறோவர்ஸ் சேக்கிள்" நிறுவனமாகும்.
வாகரை, வாழைச்சேனை, ஏறாவூர்ப்பற்று மற்றும் கிரான் மண்ணிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட இரசாயன கலப்படமற்ற தூய இயற்கைமுறை உற்பத்திகளை சந்தைப்படுத்த ஆரம்பித்துள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.
தரமான உற்பத்திகள் அத்தாட்சிப்படுத்தப்பட்ட (Certifed) விவசாயிகளிடமிருந்து பெறப்படுகின்றன
(Organic Certificate PGS From Good Market Sri Lanka)
எம்மிடமிருந்து
- இரசாயண கலப்படமற்ற உள்ளூர் மரக்கறிகள் மற்றும் கீரை வகைகள்
- இயற்கை உரம் (கூட்டுப்பசளை)
- திரவப்பசளைகள் (IMO, இலைக்கரைசல், பழக்கரைசல், மீன் கரைசல், கல்சியம், கல்சியம் பொஸ்பெயிட், இஞ்சிக் கரைசல்)
- தானியங்கள் (பயறு,கௌப்பி,உழுந்து)
- இஞ்சி,மஞ்சள்
- பழவகைகள்
கிடைக்கக்கூடிய இடங்கள்
- மட்டக்களப்பு விற்பனை நிலையம் (Batticaloa Outlet) மட்டக்களப்பு பொதுச்சந்தைக்கு அருகில்.
- காத்தான்குடி விற்பனை நிலையம் (Kattankudy Outlet) - குட்பின் சந்திக்கு அருகில்.
- ஏறாவூர் பற்று, செங்கலடி விற்பனை நிலையம் & கரடியனாறு சேகரிப்பு நிலையம்.
- கிரான் சேகரிப்பு நிலையம்.
- வாழைச்சேனை விற்பனை நிலையம்
- பால்சேனை (வாகரை)சேகரிப்பு நிலையம் & பால்சேனை விற்பனை நிலையம், கதிரவெளி விற்பனை நிலையம்.
உள்ளூர் உற்பத்திகள்
- தேங்காய் எண்ணெய் (உருக்கெண்ணெய் /சமையல் எண்ணெய்)
- மிளகாய்த்தூள்
- மஞ்சள்தூள்
மேலதிக ஓடர்களுக்கு,
முகாமையாளர்,
நேச்ச குறோவர்ஸ் சேக்கிள்,
கும்புறுமூலை, வாழைச்சேனை.
தொ. இல. 074-0210489.
"ஒவ்வொரு கொள்வனவும் உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்"
நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

Since 2014

# அருந்ததி

இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

25300 | வேள | 1975
யாழ்ப்பாணம் | இந்து
Germany | Manager
Diploma | அத்தம் (கன்னி)
179 செ.மீ

25273 | கோ | 1986
மாதகல் | இந்து | Canada
Tech Account Manager
சித்திரை (துலாம்) Degree
170செ.மீ | செவ்: 04

24448 | வேள | 1992
ஏழாலை | இந்து Sri Lanka
Tech Writer | B.eng
சதயம் (கும்பம்)
190 செ.மீ

25272 | வேள | 1976
யாழ்ப்பாணம் | இந்து | Switz
Volunteer Teacher
அஸ்வினி (மேடம்)
172 செ.மீ | செவ்: 01

25299 | வேள | 1997
வேலணை | Newzland
Admin Staff | B.eng
ஆயிலியம் (கடகம்)
189 செ.மீ | சு +செவ்: 04

25274 | வேள | 1994
யாழ்நகரம் | இந்து
Business | A/L
உத்தராடம் (மகரம்)
157 செ.மீ

25254 | வேள | 1978
மட்டக்களப்பு | Australia
Forklift Driver | Diploma
அஸ்வினி (மேடம்)
172 செ.மீ

25264 | வேள | 1989
திருகோணமலை | இந்து
Senlror Software Engineer
Bsc | அத்தம் (கன்னி)
172 செ.மீ | சு + செவ்: 02

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

23341 | அ | 1959
கம்பஹா | இந்து | Sri Lanka
Asst Accountant
Non RC | A/L
166 செ.மீ

25293 | வேள | 1994
முல்லைத்தீவு | Venezuela
Development officer
Degree | மூலம் (தனுசு)
180 செ.மீ | சு + செவ்: 08

25303 | வேள | 1998
[illegible] | Sri Lanka
Vocational Course
உத்திரட்டாதி (மீனம்)
170 செ.மீ | செவ்: 02

24199 | வேள | 1990
நல்லூர் | இந்து | MBA
Junior Excutive Asst
ரோகிணி (ரிஷபம்)
155 செ.மீ | செவ்: 07

25262 | வேள | 1998
கொண்டாவில் | இந்து | SL
Asst Project Manager
Bsc | மகம் (சிம்மம்)
187 செ.மீ | செவ்: 07

24283 | வேள | 1994
நெல்லியடி | இந்து | Divorced
Graduate Teacher
Bsc | ரேவதி (மீனம்)
180 செ.மீ | செவ்: 12

25284 | வேள | 1991
அல்வாய் | இந்து | Sri Lanka
Doctor | MBBS
பூரம் (சிம்மம்)
165 செ.மீ

23328 | வேள | 1994
உரும்பிராய் | இந்து | SL
Lecturer
Bsc | மூலம் (தனுசு)
152 செ.மீ

since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
வழங்கும்

# வரன் தேடுவோம் வாருங்கள்

ஆயிரக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு மண-மக்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்

## யாழ்ப்பாணம்

செல்வமஹால் 20-11-2022

## கொழும்பு

தமிழ்ச்சங்கம் 27-11-2022

இந்தியாவிலிருந்து

# பிரபல ஜோதிடர்

## பட்டுக்கோட்டை சுப்ரமணியன்

அவர்கள் நவம்பர் 20 முதல் 27 வரை இலங்கையில், உங்கள் ஜாதக பலன்களை அறிந்துகொள்வதற்கு

நவம்பர் 20, 21, 22
யாழ்ப்பாணத்திலும்

நவம்பர் 24, 25, 26, 27
கொழும்பிலும்



முன்பதிவு செய்ய அழையுங்கள்

074 172 4524

அருந்ததி பிரைவட் லிமிட் | +94 777 164 524
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்
# BRUNTHA BEAUTY PARLOR
# PUSHPARATNAM PRASHANTHINI
# அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி












**08th of January 2023**
**Contact 076 9759197**
**At BMICH MAIN HALL**

# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்

# HEMA BEAUTY CARE
# HEMALATHA

## அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி




















08th of January 2023
Contact 076 9759197
At BMICH MAIN HALL

# கல்வியின் மூலம் எதனையும் சாதிக்க முடியும் என்பதனை மறந்து விடக்கூடாது

## வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ்.எம்.எம். அமீன்




**எஸ்.சபேசன்**

சிறுபராயத்திலே கல்வியினை சிறந்தமுறையில் கற்பதனாலேயே மாணவர்களாகிய நீங்கள் எதிர்பார்த்த இலக்கை அடைவதுடன் உங்களது நமங்களை ஏனையவர்களால் உச்சரிக்கும் அளவிற்கு உங்களது புகழ் மேலோங்குவதற்கான கருவியே கல்வி என்பதனை மறந்துவிடக்கூடாது. ஆகவே கல்விக்கே அனைவரும் முதலிடம் வழங்குவது காலத்தின்தேவையாகும் என சம்மாந்துறை வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ்.எம்.எம். அமீன்தெரிவித்தார்.சம்மாந்துறைகல்விவலயத்திற்குட்பட்ட வேப்பையடி கலைமகள் மகாவித்தியாலயத்தில் 2020 ஆம் ஆண்டுவெளியானஉயர்தரப்பரீட்சைமற்றும்சாதாரணதரப் பரீட்சையில் சாதனைபடைத்த மாணவர்களையும் பாடசாலையில் கற்பித்து இடமாற்றம் பெற்றுச்சென்ற அதிபர் ஆசிரியர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு வித்தியாலயத்தில் செவ்வாய்க்கிழமை அதிபர் என். பிரபாகர் தலைமையில் இடம்பெற்றபோது மேற்கண்டவாறு தரிவித்தார்.

விசேட அதிதிகளாக இலங்கை வங்கி முகாமையாளர் கு.சசிகரன், ஆசிரிய ஆலோசகர் இ.குணசீலன் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் செயலாளர் கு.மதிவண்ணன் பாடசாலையின் பிரதி அதிபர் எம் .தர்மலிங்கம் உட்பட ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வின்போது வேப்பையடி கலைமகள் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற அதிபர் க.பேரானந்தம் சம்மாந்துறை வலயத்தின் ஆங்கிலப்பாட வளவாளர் பி.வி.குணரெட்ண, ஆசிரியர்களான திருமதி எம்.ஆர் குமாரராஜா, தே.ருக்மாங்கரன்,மா.பேரின்பராசா,திருமதி எஸ்.ராஜன் ஆகியோருடன் 2020 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் 3 ஏ சித்திபெற்ற சி.தர்சிக்கா 2020 ஆம் ஆண்டு சாதாரணதரப் பரீட்சையில் 9 ஏ சித்தி பெற்ற தி.சஜந் ஆகியோரும் பாராட்டிக்கௌரவிக்கப்பட்டதுடன் வலயக்கல்விப்பணிப்பாளரின் சேவையினைப் பாராட்டி அப்பிரதேச பெற்றோர்களால் பொன்னாடை போர்த்தி கௌவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

# மட்டு. மேற்கு இளைஞர், யுவதிகள் தேசிய தொழில் தகுதி பெற்றுக்கொள்ள முன்வர வேண்டும்

## வலயக்கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம்



மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் உள்ள இளைஞர், யுவதிகள் தேசிய தொழில் தகுதியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்வர வேண்டும். இதன்மூலமே எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்க முடியுமென மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் தெரிவித்தார்.

தற்போதைய சூழல் குறித்தும், இளைஞர், யுவதிகளுக்கான சவால்கள் குறித்தும் வினவிய போதே இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் கூறுகையில், இலங்கை தகுதி கட்டமைப்புக்கேற்ப, தற்போது பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்கள் பாடசாலை கல்வி ஊடாக பல்கலைக்கழகம் சென்று அதன்மூலமாக தங்களது தகுதிகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதேவேளை கடந்த கால பல்வேறு சூழல் காரணிகளால் பாடசாலை கல்வியின் ஊடாக தகுதிகளை வளர்த்துக்கொள்ள முடியாத சூழலில் இருக்கின்ற அனைத்து இளைஞர் யுவதிகளும் தேசிய தொழில் தகுதிகளின் ஊடாக தமது தகுதிகளை வளர்த்துக் கொள்வதற்காக இருக்கின்ற வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு வளர்த்துக் கொள்வதன் மூலமாக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தொழிலைப்பெற்றுக் கொள்ள முடிவதுடன், சிறந்த ஊதியத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

தேசிய தொழில் தகைமையை வழங்குகின்ற பல்வேறு நிறுவனங்கள் எமது மாவட்டத்திலே உள்ளன. இது தொடர்பான விழிப்புணர்வுகளும் மாணவர்களுக்கு நடாத்தப்படுகின்றன. தொழில் சந்தைகளும் நடைபெறுகின்றன. ஆனாலும் இளைஞர், யுவதிகள் முன்வருகின்றமை மிகக்குறைவே. எனவே தற்கால சூழல், எதிர்கால போட்டி நிலைமைகளை கருத்தில் கொண்டு இளைஞர், யுவதிகள் தேசிய தொழில் தகைமையை பெற்றுக்கொள்வதற்கு முன்வரவேண்டும் என்றார்.

# வேப்பையடி கலைமகள் மகாவித்தியாலயத்தில் சாதனையாளர்கள் பாராட்டிக் கௌரவிப்பு






**எஸ்.சபேசன்**

சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட வேப்பையடி கலைமகள் மகாவித்தியாலயத்தில் 2020 ஆம் ஆண்டு வெளியான உயர்தரப் பரீட்சை மற்றும் சாதாரணதரப் பரீட்சையில் சாதனைபடைத்த மாணவர்களையும் பாடசாலையில் கற்பித்து இடமாற்றம் பெற்றுச்சென்ற அதிபர் ஆசிரியர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு வித்தியாலயத்தில் செவ்வாய்க்கிழமை அதிபர் என்.பிரபாகர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீன், விசேட அதிதிகளாக இலங்கை வங்கி முகாமையாளர் கு.சசிகரன், ஆசிரிய ஆலோசகர் இ.குணசீலன் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் செயலாளர் கு.மதிவண்ணன் பாடசாலையின் பிரதி அதிபர் எம் .தர்மலிங்கம் உட்பட ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர்

இந்நிகழ்வின்போது வேப்பையடி கலைமகள் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற அதிபர் க.பேரானந்தம் சம்மாந்துறை வலயத்தின் ஆங்கிலப்பாட வளவாளர் பி.வி.குணரெட்ண, ஆசிரியர்களான திருமதி எம்.ஆர் குமாரராஜா, தே.ருக்மாங்கரன்,மா.பேரின்பராசா,திருமதி எஸ்.ராஜன் ஆகியோருடன் 2020 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் 3 ஏ சித்திபெற்ற சி.தர்சிக்கா 2020 ஆம் ஆண்டு சாதாரணதரப் பரீட்சையில் 9 ஏ சித்தி பெற்ற தி.சஜந் ஆகியோரும் பாராட்டிக்கௌரவிக்கப்பட்டதுடன் வலயக்கல்விப்பணிப்பாளரின் சேவையினைப் பாராட்டி அப்பிரதேச பெற்றோர்களால் பொன்னாடை போர்த்தி கௌவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

# “திருக்கோணேஸ்வரம்” தொன்மை கூறும் நூல் திருகோணமலையில் அறிமுக விழா





**(அ . அச்சுதன் )**

திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலய பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் நேற்று 15.11.2022 செவ்வாய்க்கிழமை மலை 3.30 மணிக்கு திருகோணமலை நகரசபை பொது நூலகத்தில். யாழ்ப்பாணப் பல்கலை கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதன் எழுதிய வரலாற்றுப் பதிப்பான “திருக்கோணேஸ்வரம்” எனும் தொல்லியல் சான்றுகளை உள்ளடக்கியதான நூலின் அறிமுக விழா திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலனசபைத் தலைவரும், சட்டத்தரணியுமான துஸ்யந்தன் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் வரவேற்புரையினை மக்கள் கலை அரங்கின், கலை இலக்கிய செயற்பாட்டாளர் வ.தர்மபவன் நிகழ்த்தினார்.

ஊடகவியலாளரும் ஓய்வுபெற்ற அதிபருமான திருமலை நவம் அவர்கள் நூலின் அறிமுக உரை நிகழ்த்த, நூல் தொடர்பான கருத்துரைகளை யாழ்பல்கலைக் கழக தமிழ்துறை மேனாள் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா ,வரலாற்றுத்துறை மேனாள் பேராசிரியர் ப.புஸ்பரெட்ணம் ஆகியோர் நிகழ்த்தினர். சமகாலத்தின் மேலான தேவை கருதிய இப் படைப்பின் நூலாசிரியரான யாழ் பல்கலை கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதன்அவர்கள்உரையாற்றுகையில் .

ஈழத்துச் சைவ மரபை பொறுத்தவரை திருகோணேஸ்வரம் மிக முக்கியத்துவம் வாய்ந்த தொண்மை கொண்டதான வரலாற்றுச் சிறப்புகளை தன்னகத்தே கொண்ட திருத்தலம் என்றும் அது திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருவதிலிருந்து பாதுகாக்க வேண்டியது ,இளைய சமூகத்தினரின் தற்கால தேவை எவும் தெரிவித்தார். இந் நிகழ்வில் சட்டத்தரணிகள், மருத்துவர்கள், இலக்கிய ஆர்வலர்கள், அரச,அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள், இந்து ஆலய குருமார்கள், ஊடகவியலாளர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

# இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தராக பாயிஸ் முஸ்தபா நியமனம்

**நூருல் /ஹுதா உமர்**



இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தராக பிரபல சட்ட மேதை ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா அவர்கள் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு முன்னர் தேசபந்து ஜெசிமா இஸ்மாயில் அவர்களும் பேராசிரியர் இஸ்ஹாக் அவர்களும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தர்களாக இருந்திருக்கிறார்கள். எதிர்வரும் 5 ஆண்டுகளுக்காக தென்கிழக்கு பல்கலைகழகத்தின் வேந்தராக இவர் செயற்படும் விதத்தில் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# அகிம்சா சமூக நிறுவனத்தின் முயற்சியில் 50வது வீடு பலாச்சோலை கிராமத்தில் வழங்கிவைப்பு



**(செங்கலடி நிருபர் சுபா)**

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட களுவன்கேணி பலாச்சோலை கிராமத்தில் மிகவும் வரிய ஏழைக்குடும்பம் ஒன்றிற்கு அகிம்சா சமூக நிறுவனத்தின் முயற்சியில் வீடு அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. அகிம்சா சமூக நிறுவனத்தின் தலைவர் வி.விஜயராஜா அவர்களது முற்றிசியினால், கனடா நாட்டில் வசிக்கும் ஐயப்பன் பக்தர்களின் நிதிப்பங்களிப்பில், ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலகத்தின் அனுமதியுடன் குறித்த வீடானது அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 09இலட்சம் ரூபா பெறுமதியான தொகையில் இவ் வீடு அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளதுடன், மிகவும் நேர்த்தியானதும், வசதியான முறையிலும் குறித்த வீடு மிகவும் குறுகிய நாட்களுக்குள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அகிம்சா சமூக நிறுவனத்தின் முயற்சியில் அமைக்கப்பட்டுள்ள 50வது இவ் வீட்டினை உத்தியோக பூர்வமாக வீட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு மிகவும் சிறப்பாக இன்று காலை இடம்பெற்றது. அமிம்சா சமூக நிறுவனத்தின் தலைவர் வி.விஜயராஜா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் செங்கலடி பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் கருணாகரன் அவர்களும், அமிம்சா சமூக நிறுவனத்தின் நிறைவேற்றுச் செயலாளர் ராஜ்மோகன், பலாச்சோலை கிராமசேவையாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் உள்ளிட்டவர்களுடன் கிராம மக்களும் கலந்துகொண்டருந்தனர்.

இதே வேளை அதிதிகள் மற்றும் பயனாளியான கந்தையா மனோரஞ்சிதம் குடும்பத்தினர் இணைந்து உத்தியோக பூர்வமாக வீட்டை திறந்துவைத்ததுடன், பயனாளியிடம் வீட்டிற்கான பத்திரங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# மாவட்டத்தில் தற்கொலை அதிகரிக்கப்பட்டுள்ளதா? தற்கொலைகளை நிறுத்த சமூகம் உறுதி பூணவேண்டும்



மட்டக்களப்பு மாவட்டத்தில் பலதரப்பட்ட பிரச்சினைகள் சமூகத்திற்கு மத்தியில் இருந்தாலும் புதுப்புது பிரச்சினைகள் இங்கு வாழுகின்றவர்கள் மத்தியில் குறிப்பிட்ட வீதம் மிகவும் ஆழமாகப் பதிகின்றது. பிரச்சினைகள் அதிகரிக்க அதிகரிக்க பிரச்சினைகள் உள்ளவர்கள் தாங்களே சுயமாக முடிவெடுக்கின்றனர். இம்முடிவு என்பது அனைவரையும் மகிழ்ச்சிப் படுத்துகின்றனவா அல்லது துன்ப துயரங்களில் சிக்கவைக்கின்றனவா?

சுயமாக எடுக்கப்படும் முடிவுகளை பலரிடமும் பேசி தங்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் வழி உள்ளன. அவ்வாறு இருந்தும் குறிப்பிட்ட சிலர் பேசியும், கலந்துரையாடியும் தங்களை வளப்படுத்திக் கொள்ளாமல் தாங்கள் சுயமாக தங்களுக்கு ஏற்படுகின்ற மன அழுத்தம் காரணமாக சில சமூகம் விரும்பாத முடிவுகளை எடுப்பதற்கு நிற்பந்திக்கப்படுகின்றனர். சூழலில் உள்ள குடும்பத்தவர்கள் சுற்றுச் சூழலிலுள்ள உற்றார் உறவினர்கள் நண்பர்கள் தங்களுடைய வேலைப் பழு காரணமாக ஏனையவர்களின் விடயத்தில் அக்கறை செலுத்தா விடினும் அக்கறை செலுத்த வேண்டிய நிற்பந்தம் தற்சமயம் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்தாகும்.

ஒரு வாரத்திற்குள் கல்வியுடன் தொடர்புடையவர்கள் இம் மாவட்டத்தில் மூன்று பேர் தற்கொலை செய்யுமளவிற்கு துணிந்து அம் முடிவை அமுலாக்கியது என்பது எமது சமூகத்தை உற்றார் உறவினர்களை துன்ப துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. இது தொடர்பாக பல வாதப்பிரதிவாதங்கள் முற்றுப் பெறாமல் நடந்து வருகின்றன. எது நடந்ததோ இல்லையோ தற்கொலைகள் நிறுத்தப்பட வேண்டும். நிறுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இவ் விடயத்தில் சமூகத்திலுள்ள அனைவருக்கும் பங்கு உண்டு. காரணம் வேலைப்பழு பிரச்சினைகள் காரணமாக குறிப்பிட்ட வீதத்தை உடையோார் நிம்மதியை தேட வேண்டிய சூழல் மாவட்டத்தில் சகல தரப்பு மட்டத்திலும் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதை சீர் செய்வதற்கு அனைவரும் அறத்துடனும், மகிழ்ச்சியுடனும் பேசி கலந்துரையாடி நன்றாக வாழக் கூடிய சூழலை உருவாக்குவதற்கு அனைவரும் உறுதி பூணவேண்டுமென மு.கிழக்கு மாகாண சபை உறுப்பினர், ஈ.பி.ஆர்.எல்.எப் இரா. துரைரெத்தினம் வேண்டிக் கொண்டுள்ளார்.

# புளியந்தீவு, வன்னியனார் வீதி வடிகான் அமைப்பு வேலைகள் ஆரம்பித்து வைப்பு



எழுச்சி மிகு மாநகரம் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட 17ஆம் வட்டாரம் புளியந்தீவு, வன்னியனார் வீதி வடிகான் அமைப்பு வேலைகள் நேற்று(15) செவ்வாய் கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன. மட்டக்களப்பு மாநகர சபையின் 2021ம் ஆண்டுக்கான பாதீட்டு நிதியின் ஊடாக மட்டக்களப்பு மாநகர சபையின் 17ஆம் வட்டார உறுப்பினர் ம.ரூபாகரன் அவர்களின் பாதீட்டு முன்மொழிவுக்கு அமைய 2.1 மில்லியன் ரூபாய் நிதியில் புளியந்தீவு, வன்னியனார் வீதி வடிகான் அமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்படி வடிகான் அமைப்பு பணிகளை மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகர சபையின் வேலைகள் குழு தலைவர் இரா. அசோக், மாநகர சபை உறுப்பினர்களான த.இராஜேந்திரன், அந்தோணி கிருராஜன், துரைசிங்கம் மதன், மாநகர சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான டி.ஜே.கிறிஷ்டிராஜ், ஆர். சுதர்சன் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர். மிக நீண்ட காலமாக, மழை காலங்களில் அப்பகுதியில் மழை நீர் தேங்கி வருவதுடன் வதிவிடங்களுக்குள் நீர் உட்புகுவதால் பொதுமக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக குறித்த வட்டார உறுப்பினர் ஊடாக மாநகர சபைக்கு கிடைக்கப்பட்ட வேண்டுகோளிற்கு அமைய மேற்படி பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# கந்தளாயில் துப்பாக்கிவுடன் ஒருவர் கைது



**எப்.முபாரக்**

கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மறைத்து வைத்திருந்த சொட்கன் துப்பாக்கியுடன் ஒருவரை நேற்று(15) கைது செய்துள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர். வான்எல பகுதியைச் சேர்ந்த இருபது வயது ஒருவரே இவ்வாறு சொட்கன் துப்பாக்கியுடன் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த நபர் மிருகங்களை வேட்டையாடுவதற்கு பயன்படுத்தி வந்ததாக பொலிஸ் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அக்போபுர குற்ற புலனாய்வு பொலிஸ ாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய கைது செய்யப்பட்டுள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜரபடுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# மயிலம்பாவெளி விபுலானந்தா வித்தியாலயத்தில் மாணவர் பாராளுமன்றத் தேர்தல்




**(சுமன்)**

மட்டக்களப்பு கல்வி வலயத்திற்கு உட்பட்ட மயிலம்பாவெளி விபுலாந்தா வித்தியாலயத்தில் மாணவர் பாராளுமன்ற தேர்தல் பாடசாலையின் அதிபர் எஸ்.வை.சந்திரகுமார் தலைமையிலும், பிரதி அதிபர் செ.பத்மநாதன் வழிப்படுத்தலிலும் சகல ஆசிரியர்களின் ஒத்துழைப்போடும் வெகு சிறப்பாக இடம்பெற்றது. மாணவர்கள் மத்தியில் கல்வி அறிவோடு சேர்த்து சமூக விடயதானங்களும் மிளர வேண்டும், மாணவர்களுக்கு தேர்தல் தொடர்பான அனுபவமுறைமை தோற்றுவிக்கப்பட வேண்டும் என்ற நோக்கங்களோடு பாடசாலை மட்டத்தில் மாணவர் பாராளுமன்ற முறைமை உருவாக்கப்பட்டு அதற்கான தேர்தலொன்றும் மேற்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் மாணவர்கள் மத்தியில் வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கான விருப்பிலக்கங்கள் வழங்கப்பட்டு மாணவர்களுடைய வாக்குப் பதிவுகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம்






மட்டக்களப்பில் முக்கிய தளமாக இருந்த தரவை மாவீரர் துயிலும் இல்லம் நேற்று செவ்வாய்க்கிழமை இரண்டாம் கட்டமான சிரமதான பணிகள் பொதுமக்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டு இருந்தனர். இதேவேளை இந்நிகழ்விற்கு மட்டக்களப்பு தரவை மாவீரன் துயிலும் இல்ல நிகழ்வுகளின் ஏற்பாட்டுக் குழு நிதர்சன் மற்றும் லவக்குமார் உட்பட கணிசமான அளவு பொதுமக்களும் சிரமதான பணியில் ஈடுபட்டனர்.

# சர்வதேச நூலகர் மாநாட்டுக் கருத்தரங்கு கலந்துகொள்ள பிரதம நூலகர் மகேஸ்வரன் கலந்து இந்தியா பயணம்

**இக்பால் அலி**



சர்வதேச நூலகர் மாநாட்டுக் கருத்தரங்கு இந்தியாவிலுள்ள தமிழ் நாடு கோடைக்கானல் அன்னை திரேசா பல்கலைக்கழகத்தில் 24 முதல் 26 ஆம் திகதி வரை நடைபெறும் இந்நிகழ்வில் இலங்கையில் இருந்து பேராதனைப் பல்கலைக்கழக பிரதம நூலகர் கலாநிதி ஆர். மகேஸ்வரன் கலந்து கொள்வதற்காக இந்தியா பயணமாகிறார்.

தமிழ் நாட்டு கல்வி சார் நூலகர் சங்கமும் அன்னை திரேசா பல்கலைக்கழகமும் இணைந்து நடத்தும் "உயர் கல்விக்கு நூலகப் பன்முகத் தன்மை" என்ற தலைப்பில் சர்வதேச நூலகர் மாநாட்டுக் கருத்தரங்கில் " ஆதார சுருதி உரை" வழங்கவும் வளவாளராகவும் கலந்து கொள்ளவுள்ளார். இம்மாநாட்டுக் கருத்தரங்கு முதலாவது அமர்வு கலாநிதி ஆர். மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளதுடன் உலக நாடுகளிலுள்ள நூலகர்கள் இந்த நூலகர் மாநாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.






# வைரஸ் காய்ச்சலுக்கு சம்மாந்துறை அல்மர்ஜான் மாணவி பலி

( வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை அல்மர் ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி( தேசிய பாடசாலை) மாணவி ஒருவர் வைரஸ் காய்ச்சலுக்கு நேற்று பலியாகி உள்ளார். தரம் 7 இல் பயிலும் சம்மாந்துறையைச் சேர்ந்த 12 வயது மாணவியே இவ் விதம் பரிதாபமாக உயிரிழந்தார். பாடசாலை வெண் கொடியுடன் சோகமயமாக காட்சியளித்தது. இம் மரணத்தை அடுத்து பாடசாலை மாணவர்களிடையே ஒருவித அச்சம் எழுந்துள்ளது.

நேற்று (15) அவர் இரவு கல்முனை அஷ்ரப் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது ஜனாசா இன்று (16) புதன்கிழமை சம்மாந்துறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. காய்ச்சல் பீடிக்கப்பட்ட நிலையில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கல்முனை அஸ்ரப் ஆதார வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டிருந்தார். அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று இரவு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

வைரஸ் காய்ச்சலின் காரணமாக ஏற்பட்ட மரணம் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. சமகால மாரி மழையை அடுத்து அம்பாறை கல்முனை பிராந்தியத்தில் குறிப்பாக சம்மாந்துறை பகுதியில் டெங்கு நோய்க்கான அறிகுறிகளும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, சம்மாந்துறை தாருஸ லாம் மகா வித்யாலயத்தில் கல்வி சாரா ஊழியராக கடமை புரியும் அர்சுத்தின் என்பவர் இன்று புதன்கிழமை காலமானார். இதனால் பாடசாலையில் வெள்ளைக்கொடி கட்டப்பட்டது.

# முன்மாதிரியான செயலை தினந்தோரும் புரியும் அல்-ஹிலால் மாணவி இப்லாவுக்கு கௌரவம்




(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர் ஒருவருக்கு பகிர்ந்து சாப்பிட தினந்தோரும் உணவு கொண்டு வந்து வழங்கி வருகின்ற முன்மாதிரி மிக்க மனிதாபிமான செயலைச் செய்துவரும் தரம் 5 இல் கல்வி பயிலும் மாணவி ஜே. எப். இப்லா அதிபர் உட்பட அதிதி மற்றும் ஆசிரியர்களால் புடைசூழ பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இம் மாணவியின் சிறப்பான மனிதாபிமான முயற்சியைப் பாராட்டும் முகமாக சபையோரால் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்ட நிகழ்வு நேற்று சாய்ந்தமருது அல்–ஹிலால் பாடசாலையில் நடைபெற்றது. இ,வ்வுணவை தினந்தோறும் வழங்குவதற்கு உறுதுணையாக இருக்கின்ற அவரது பெற்றோரும் ,தன்போது பாராட்டப்பட்டனர். இந்நிகழ்வுக்கு பொறியியலாளர் எம்.சீ. கமால் நிஸ ாத் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். எதிரே நடைபெறவிருக்கும் ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையை முன்னிட்டு நடாத்தப்பட்ட முன்னோடி பரீட்சைகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை ஊக்குவித்து கௌரவிக்கின்ற நிகழ்வின் போதே இவர் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

கல்லூரியின் அதிபர் யூ.எல். நசார் தலைமையில் நடைபெற்ற ,ந்நிகழ்வின் போது, 13 முன்னோடிப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு அதில் 10 ஆவது பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் வரிசையில் 1ஆம், 2ஆம், 3ஆம் ,டங்களைப் பெற்ற மாணவர்கள் உட்பட வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களும் பரிசுகள் வழங்கி ஊக்கப்படுத்தி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில், உதவி அதிபர்களான எம்.எச்.நுஸ்ரத் பேகம், ஜனுல் மர்சுனா மற்றும் ஆசிரியர்கள், தரம் 5 பகுதித் தலைவர், ஆசிரிய, ஆசிரியைகள், மாணவ, மாணவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கார்த்திகை மாதமும் புனித ஐயப்ப விரதமும்

தலவாக்கலை பி.கேதீஸ்

கார்த்திகை மாதம் துவங்கியதும் இலங்கையிலுள்ள ஐயப்ப பக்தர்கள் அனைவரும் ஐயப்ப பக்தியில் மூழ்கி போகின்றனர். இவர்கள் ஐயப்பனுக்காக மாலை அணிந்து பக்திச் செறிவுடன் ஐயப்பன் நாமத்தை சொல்லி விரதம் அனுஷ்டிக்கிறார்கள். ஐயப்பன் கலியுக வரதன், கலிகால தோஷத்தை அகற்ற ஐயப்பனை தரிசித்தால் போதும் என்கின்ற உணர்வு மேலோங்குகிறது. ஆண்டுதோறும் இருமுடி ஏந்தி சபரிமலைக்கு புனித யாத்திரை செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போகிறது. கடுமையான முறையில் அனைத்து விதமான விரதங்களையும் கடைபிடிக்கும் மாலையிட்ட ஐயப்பன் பக்தன் சுவாமி ஐயப்பனின் பரிபூரண அனுக்கிரகம் பெற்றிருப்பதால் பக்தனையே ஐயப்பன் அவதாரமாக மற்றவர்கள் மதிக்கிறார்கள் என்பதை நிதர்சனமான உண்மை. மாலை அணிந்து விரதம் இருந்து சபரிமலை செல்வோர் மேற்கொள்ள வேண்டிய விரத முறைகள், சபரிமலை செல்ல விரும்புவர்கள் கார்த்திகை மாதம் முதல் நாள் அல்லது 19ஆம் திகதிக்கு முன்னர் ஒரு நாளில் மாலை அணிய வேண்டும். கார்த்திகை மாதம் முதல் நாள் மாலை அணிந்தால் நாள் பார்க்க வேண்டாம்.

அதற்குப் பின் அணிபவர்கள் நல்ல நாள் பார்த்து மாலை அணிய வேண்டும். எப்படி இருந்தாலும் குறைந்தது 41 நாட்கள் விரதம் இருக்க வேண்டும்.மாலை துளசி மணி 108 கொண்டதாகவோ ஒரு உருத்ராட்சை மணி 54 உள்ளதாகவோ வாங்கி அதில் ஐயப்பன் திருவுருவம் பதித்த டாலர் ஒன்றை இணைத்து அணிய வேண்டும்.தாய் தந்தையின் நல்லாசியுடன் குருசாமி ஒருவரின் கையால் ஆலயத்தில் பூஜை செய்து மாலை அணிய வேண்டும். குருசாமி கிடைக்காவிட்டால் கோவில் சென்று கடவுள் பாதத்தில் மாலையை வைத்து அர்ச்சகரிடம் குருதட்சனை கொடுத்து அர்ச்சனை செய்து ஐயப்பனையே குருவாக நினைத்து மாலை தரிசித்துக் கொள்ளலாம். இது எதுவுமே முடியாவிட்டால் கடவுளின் பிரதிநிதியான தனது தாயிடம் ஆசிர்வாதம் வாங்கிய அவர்களது கையால் மாலையை அணிந்து கொள்ளலாம். இவ்வாறு மாலை அணிந்த பின்பு கோபதாபம், குரோதம் கொள்ளக்கூடாது. சிநேகம் பாராட்டி பணிவுடன் பழக வேண்டும். இயற்கையின் படைப்புகள் எல்லாவற்றையுமே இறைவனின் சொரூபமாக பார்க்க வேண்டும் .காலையில் சூரிய உதயத்துக்கு முன்பும் மாலையிலும் குளிர்ந்த நீரில் நீராடி கோவில்களிலோ வீடுகளிலோ ஐயப்பனை மனதார நினைத்து சரணங்கள் கூறி வணங்க வேண்டும்.கறுப்பு ,நீலம் ,காவி, பச்சை நிற வேட்டி சட்டை அணிய வேண்டும்.பிரம்மச்சரிய விரதத்தை முழுமையாக கடைப்பிடிக்க வேண்டும்.மாலையை எக்காரணம் கொண்டும் கழற்றக் கூடாது. இரத்தம் சம்பந்தப்பட்டவர்களின் மரணம் ஏற்பட்டால் குருசாமியிடம் சென்று மாலையை கழட்டிய பிறகு துக்கத்தில் கலந்து கொள்ள வேண்டும். ஏதாவது ஒரு காரணத்தால் மாலையை கழற்ற நேர்ந்தால் அந்த ஆண்டு சபரிமலை செல்லக்கூடாது. பெண்களின் சடங்கு வைபவத்திற்கோ குழந்தை பிறந்த வீட்டிற்கோ செல்லக்கூடாது. மது ,மாமிசம், புகைப்பிடித்தலை விட்டு விட வேண்டும். மாலை அணிந்த பக்தர்களின் வீட்டில் சாப்பிடலாம். மற்றவர்கள் வீட்டில் பால், பழம் சாப்பிடலாம். வீட்டுப் பெண்களுக்கு மாலை அணிந்த காலத்தில் மாதவிடாய் ஏற்பட்டால் ஏழு நாட்கள் கழித்து பின்னர் தான் அவர்கள் சமைத்த உணவை உண்ண வேண்டும். காலணிகள் பயன்படுத்தக்கூடாது.கன்னிச்சாமிகள் தங்களின் வசதிக்கேற்ப வீடுகளில் பூஜைகள் நடத்தி ஐயப்பன்மார்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னதானம் செய்யலாம். எதிர்ப்படும் ஐயப்ப பக்தர்களை ஐயப்பனாகவும் பெண்களை மாளிகை புறத்தம்பிக்கையாகவும் கருதிப் பழக வேண்டும். மற்றவர்களிடம் பேசும் பொழுது சாமி சரணம் எனத் தொடங்கி விடைபெறும் பொழுது சாமி சரணம் எனக் கூற வேண்டும். இருமுடி கட்டு பூஜையை வீட்டிலோ குருசாமி இடத்திலோ கோவில்களிலோ வைத்து நடத்த வேண்டும். சபரிமலை பயணம் புறப்படுகையில் யாரிடமும் போய் வருகிறேன் எனக் கூறக்கூடாது. பம்பை நதியில் நீராடும் பொழுது மறைந்த தனது முன்னோர்களை நினைத்து நீராட வேண்டும்.யாத்திரை முடிந்து வீடு திரும்பியதும் ஐயப்பனின் அருள் பிரசாத கட்டினை தலையில் ஏந்தியப்படியே வீட்டு வாயிலின் படியில் விடலை தேங்காய் அடித்து வீட்டில் உள் நுழைய வேண்டும். வீட்டில் பூஜை அறையில் பூஜை செய்து கட்டினை பிரித்து பிரசாதத்தை விநியோகம் செய்ய வேண்டும். யாத்திரை இனிய முறையில் நிறைவுற்ற பின் குருநாதர் அல்லது தாயார் மூலம் மாலை கழற்றும் போது சொல்லும் மந்திரத்தை கூறி மாலையை கழற்றி சந்தனத்தில் நனைத்து ஐயப்பன் திருவுருவப்படத்திற்கு முன்னால் வைத்துவிட்டு தீபாராதனை காட்டி விரதம் முடிக்க வேண்டும்.

# மட்டக்களப்பில் இடம்பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிக்கொடுப்பனவுத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

"ஒவ்வொருவரையும் கவனித்துக்கொள்வோம்" எனும் தொனிப்பொருளிற்கு அமைவாக பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள், வயோதிபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கான உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வு இன்று (16) திகதி மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

தற்பொழுது நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியான சூழலில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட 8 பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள இதுவரை அரச கொடுப்பனவிற்காக காத்திருப்பு பட்டியலிலுள்ள மாற்றுத்திறனாளிகள், வயோதிபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் பயன்பெறும் வகையிலான உதவித்திட்டமானது ஊடீஆ **(christian blind mission)** நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் இந் நிறுவனத்தின் பங்களாளர் நிறுவனங்களான **CAMID, PPCC** மற்றும் **YMCA** ஊடாக மாவட்ட செயலகத்துடன் ,ணைந்து 3000 பயனாளிகளுக்காக தலா 5000 கொடுப்பனவானது மண்முனை வடக்கு, ஏறாவூர் பற்று, ஏறாவூர் நகரம், கோறளைப்பற்று மத்தி, கோரளைப்பற்று மேற்கு, மண்முனை மேற்கு, காத்தான்குடி மற்றும் போரதீவு பற்று பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள தெரிவு செய்யப்பட்ட 3000 மாற்றுத்திறனாளிகள், வயோதிபர்களுக்கு மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்படவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வாக மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 30 மாற்றுத்திறனாளிகளுக்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் இவர்களுக்கான காசுக்கட்டளைகள் ,ன்று மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் வைக்கு வழங்கி வைக்கப்பட்டள்ளது. இந் நிகழ்வுக்கு அதிதிகளாக ஊடீஆ நிறுவனத்தின் ,லங்கைக்கான பிரதிநிதி வாணிசுரேந்திரநாதன், மண்முனை வடக்கு உதவி பிரதேச செயலாளர் திருமதி.லட்சண்யா பிரசந்தன், *CAMID* திட்டப்பணிப்பாளர் கே.காண்டீபன், **PPCC** நிறுவன இயக்குனர் அருட்தந்தை போல் சற்குணநாயகம் அடிகளார் மற்றும் **YMCA** செயலாளர் பற்றிக், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் சா.அருள்மொழி, மண்முனை வடக்கு பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் ராஜ்மோகன், மண்முனை வடக்கு பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோகத்தர் கே.ராஜன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், எதிர்நீச்சல் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# செங்கலடி பகுதியில் அதிகரித்துவரும் திருட்டு சம்பவம் அவதானத்துடன் செயற்படுமாறு கோரிக்கை

(செங்கலடி நிருபர் சுபா)

மட்டக்களப்பு – செங்கலடி பகுதியில் அதிகரித்துவரும் திருட்டு சம்பவம்கள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த சில நாட்களாக செங்கலடி பகுதியில் குறிப்பாக வர்த்தக நிலையங்களுக்குள் நுழையும் கொள்ளையர்கள் தங்களை "சேல்ஸ் ரெப்" **sales rep** என அடையாளப்டுத்தி வர்த்தகர்களுடன் உரையாடி பண மோசடியிலும் கொள்ளைச்சம்பவங்களிலும் ஈடுபடுவதாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை இன்று காலை செங்கலடி சந்தை வீதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றினுள் நுழைந்த மர்ம நபர் தன்னை ஒரு "சேல்ஸ் ரெப்"**sales rep** என அடையாளப்படுத்தி பேசியதுடன். பால்மா பொதிகளுக்கான கணக்கு மிகுதி உள்ளதாக தெரிவித்து பணம் கோரியுள்ளார். ஆரம்பத்தில் நம்பி பேசிய வர்த்தகர் பின் அவரின் பேச்சில் சந்தேகமடைந்துள்ளார். பின் குறித்த வர்த்தக நிலையத்தற்கு வந்திருந்தவர்கள் குறித்த நபர் திருடன் என என்பதை அறிந்ததையடுத்து திருடன் தப்பியோடியுள்ளார்.

இவ்வாறு செங்கலடி ஏறாவூர் நகர் பகுதிகளில் இவ்வாறான செயற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவரும் தாகவும் வர்த்தகர்கள், பொதுமக்கள் இது போன்றவர்களிடமிருந்து எச்சரிக்கையாக இருக்கும் படியும் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# மூன்றாம் நிலை தொழில் கல்வி மற்றும் தொழில் பயிற்சிக்கான மாவட்ட இணைப்பு குழு கூட்டம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் மூன்றாம் நிலை தொழில் கல்வி மற்றும் தொழில் பயிற்சிக்கான மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலக மகாநாட்டு மண்டபத்தில் இன்று (16) திகதி புதன்கிழமை இடம் பெற்றது. மூன்றாம் நிலை தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக்கான செயற்பாடு மற்றும் ஒருங்கிணைப்பிக்கான 7 உப குழுக்களின் திட்ட முன் மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அத்திட்டங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது. இந் நிகழ்வின் போது மூன்றாம் நிலை தொழிற்கல்வி மற்றும் பயிற்சியின் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் சவால்கள் தொடர்பாக விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டது .

இந் நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.நவரூபரஞ்ஜினி முகுந்தன் (காணி), பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள், திறன் அபிவிருத்தி தொழில் வழிகாட்டல் திட்ட பணிப்பாளர் நிரோஷன் ஹப்புஆராச்சி, தொழில்நுட்ப கல்லுரியின் அதிபர், வலயக்கல்வி பணிப்பாளர்கள், பிரதி கல்வி பணிப்பாளர்கள், தொழில் பயிற்சி அதிகார சபையின் உயரதிகாரிகள், மாவட்ட திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர், மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.